9th August 1965]

### நகரசபைப் பொருட்காட்சி, மதுரை

* 153 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி: கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1965-ல் மதுரை நகரசபை பொருட்காட்சி நடத்தியதா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்:** ஆம்.

**திரு. கரு. சீமைச்சாமி:** பொருட்காட்சி நடத்துவதற்கு மதுரை நகரசபைக்கு எவ்வளவு செலவாயிற்று, வரவு எவ்வளவு, அதில் லாபம் எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்:** ஆடிட் ரிப்போர்ட் வந்த பிறகு தான் அதைப் பற்றிய விவரம் சொல்ல முடியும்.

### சிவகெங்கை பஞ்சாயத்து யூனியன் அலுவலகம்

* 154 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி: கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சிவகெங்கை பஞ்சாயத்து யூனியன் அலுவலகம் கட்டுவதற்காக நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டதா ?

(இ) ஆம் எனில், அதற்காக எவ்வளவு பணம் பட்டுவாடா செய்யப்பட்டது ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்:** (அ) ஆம்.

(இ) நஷ்ட ஈடு அளிப்பதற்காக ரூ. 18,000 அனுமதிக்கும்படி மாவட்ட வருவாய்த் துறை அதிகாரி கேட்டுக்கொண்டுள்ளார். விரைவில் இத்தொகையை அனுமதித்து ஆணைகள் வெளியிடப்படும். இதற்காக நிதி வகைசெய்யப்பட்டவுடன், நில ஆர்ஜித அதிகாரி தீர்ப்புக் கூறி, அத் தொகையை வழங்குவார்.

**திரு. கரு. சீமைச்சாமி:** பஞ்சாயத்து யூனியன் கட்டடம் கட்டப்பட்டு ஐந்து வருஷம் ஆகிறது. அந்தக் கட்டடம் கட்ட நிலம் கொடுத்தவருக்கு இதுவரை பணம் கொடுக்கப்படவில்லை. கூடிய சீக்கிரம் பணத்தைக் கொடுக்க ஏற்பாடு செய்வார்களா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்:** ஏற்கனவே சர்க்காரின் சாங்ஷனுக்கு வரவில்லை. சர்க்கார் சாங்ஷன் ஆன பிறகு நில ஆர்ஜித அதிகாரி அவார்டு பாஸ் செய்து அந்தப் பணத்தைக் கொடுத்து விடுவார்.

**திரு. கரு. சீமைச்சாமி:** ரெவின்யூ அதிகாரிக்கும், நில ஆர்ஜித அதிகாரிக்கும் நிலத்தின் மதிப்பீடு சம்பந்தமாகத் தகராறு இருப்பதாகச் சொல்லப்பட்டது. அது தான் தாமதத்திற்கும் காரணம் என்று அறிகிறேன். உடனடியாக நிலத்தின் கிரயத்தையும், அதற்கான வட்டியையும் சேர்த்துக் கொடுக்க உத்தரவு போடுவார்களா ?

[9th August 1965

கனம் திரு. சே.ம.அ. மஜீத் : கனம் அங்கத்தினர் சொல்வது போலத் தகராறு எதுவும் இல்லே. நிலத்தின் மதிப்பு, நான்கு சதவிகிதம் வருட வட்டி எல்லாம் சேர்த்துத்தான் 18 ஆயிரம் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுகிறது என்று சொன்னேன்.

**பஞ்சாயத்து யூனியன் அலுவலகக் கட்டடங்களேக் கட்டுதல்**

*155 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி : கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

தமிழ்நாட்டில் 1965-ம் ஆண்டு ஜூன் மாதம் முடிய பஞ்சாயத்து யூனியன்களுக்காக கட்டப்பட்டிருக்கும் அலுவலகக் கட்டடங்களின் எண்ணிக்கை என்ன ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : 266

கனம் சபாநாயகர் : கேள்விகள் முடிவடைந்தன.

[*Note*.—An asterish at the commencement of a speech indicates revision by the Member.]

## II.—ANNOUNCEMENT.

### THE MADRAS BUILDINGS (LEASE AND RENT CONTROL) AMENDMENT BILL, 1965.

MR. SPEAKER : The Madras Buildings (Lease and Rent Control) Amendment Bill, 1965, introduced in the House the other day is a short Bill giving extension to the existing enactment. It was not discussed in the Business Advisory Committee. The other day the hon. Leader of the Opposition raised a question regarding that. This is a short Bill which has to be taken into consideration to-morrow or the day after. I want to know the sense of the House. Because it is a short Bill, I think we can waive notice, admit and take the Bill into consideration to-morrow or the day after. The other Bill, namely, the Madras Medical Practitioners Bill, 1965, is going to be referred to a Select Committee, I think, It may not come up for discussion at this session. I want to know the sense of the House. (After a pause) I think the House has no objection to take the Madras Buildings (Lease and Rent Control) Amendment Bill, 1955; for consideration to-morrow or the day after.

Now we shall pass on to the next item.

## III.—CALLING ATTENTION TO THE INCIDENCE OF LATE BLIGHT DISEASE IN THE NILGIRIS DISTRICT.

திரு. ஜே. மாதா கவுடர் : கனம் சபாநாயகர் அவர்களே, சட்டமன்ற விதி 41-இன் கீழ், "நீலகிரி மாவட்டத்தில் உருளேக் கிழங்கு கருகல் நோய் ஏற்பட்டு உருளேக் கிழங்குப் பயிர்கள் பலன்